# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**

**CC.No. 275/2012**
**PW. 6/LW.6**

| | | |
|---|---|---|
| Police Station | : | Neyveli Thermal PS |

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | R.Umadevi |
| Father Name/Husband Name | : | Ramalingam |
| Village | : | Madurai - Thirumangalam |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 12.12.2022 என்னால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் தற்போது அரசு ஹோமியோபதி மருத்துவகல்லூரி மற்றும் மருத்துவமனை திருமங்கலம் மதுரையில் விரிவுரையாளராக பணிபுரிந்துவருகிறேன். கடந்த 07.11.2012 அன்று பண்ருட்டி அரசு மருத்துமனையில் பணியில் இருந்தபோது 11.25 PM மணிகண்டன் 24 வயது ஆண் த.பெ. பன்னீர்செல்வம், கிழக்கு தெரு தொப்பிளிகுப்பம், விருத்தாசலம் தாலுக்கா என்பவரை அவருடைய மாமா மணி என்பவர் சிகிச்சைக்காக அழைத்துகொண்டுவந்தார். அவரது அடையாளங்கள் 1- இடது காலில் தழும்பு, 2வது முதுகில் மச்சம், அவரை 07.11.2012 அன்று மாலை 6.00 மணியளவில் அவரை நான்கு நபர்கள் கட்டை கொண்டு அடித்தார்கள். அவரது வீட்டில் இருந்து 1/2 கிமீ தூரத்தில் அடித்ததாக கூறினார். நான் பரிசோதனை செய்ததில் அவர் விழுங்குவதற்கு கடினமாகவும், நெஞ்சு வலி, வயிறு வலி, பல் வலி, பல் உடைந்துஇருந்ததாகவும் கூறினார். அவர் பண்ருட்டி அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக அனுமதிக்கப்பட்டார். பல் மருத்துவரின் கருத்தின் படி பற்கள் உடைந்துவிட்டதாக கூறியுள்ளனர். எந்த பல் மருத்துவர் என குறிபிட்டு விபத்து பதிவில் சொல்லவில்லை. அவருக்கு ஏற்பட்ட காயம் 1 முதல் 3 வரை சாதாரணகாயம் என்றும் 4வது காயம் கொடுங்காயம் என்றும் பல் மருத்துவரின் கருத்துபடி கொடுங்காயம் என நான் சான்று வழங்கினேன். மேற்சொன்ன விதத்தில் மேற்பட்ட காயம் ஏற்பட வாய்ப்பு உள்ளது. **(மருத்துவர் வழங்கிய காயசான்று அ.சா.ஆ.3 ஆகும்).** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

தொண்டையில் ஏற்பட்டுள்ள வலி நாள்பட்ட கடுமையான காயங்கள் இருந்தால் ஏற்பட வாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். தொண்டையில் வெளி காயங்கள் இல்லை என்றால் சரிதான். 2வதாக நெஞ்சில் ஏற்பட்டுள்ள வலி காயம்பட்ட நபர் சொல்லிதான் தெரியும் என்றும் இ.சி.ஜி எடுக்கவில்லை என்றால் என்னிடம் உள்ள ஆவணங்களில் இ.சி.ஜி எடுத்த குறிப்புகள் இல்லை. நெஞ்சு பகுதியில் விக்கமோ, ரத்தகட்டோ இல்லை. 3வதாக வயிற்றில் கூறபட்டுள்ள வலிக்கு நான் ஸ்கேன் அல்லது நுண்கதிர் படம் எடுக்கவில்லை என்றால் சரிதான். வயிற்று பகுதியிலும் வெளிகாயங்கள் இல்லை. நான்காவதாக கூறபட்டுள்ள பல் உடைந்த காயம் இருசக்கரவாகனத்தில் கிழே விழுந்தால் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். வழக்கில் கட்டையால் அடித்ததாக கூறியுள்ளார்கள் ஆனால் அவருக்கு வெளி காயங்கள் எதுவும் இல்லை என்றால் சரிதான். கட்டையால் உதட்டில், மூக்கில் அடிக்கும்போதும் உதட்டில் வீக்ககாயமோ, கிழிந்தகாயமோ ஏற்படவாய்ப்பு உள்ளது என்றால் சரிதான். காயம் பட்ட நபருக்கு அவ்வாறு எந்த காயமும் இல்லை என்றால் சரிதான். உடைந்த பல்லை நான் பார்க்கவில்லை என்றால் சரிதான். மேல் பல் அல்லது கிழ் பல் உடைந்ததா என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மணிகண்டன் கட்டையால் அடித்ததாக தான் கூறியுள்ளார் என்றால் சரிதான். சம்பவம் மணிகண்டன் வீட்டிற்கு அருகில் நடந்நததாக கூறவில்லை என்றால் சரிதான் 1/2 கி.மீ தூரத்தில் நடந்ததாக கூறியுள்ளார்.

**மறுவிசாரணை : இல்லை**

Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**

**CC.No. 275/2012**

**PW. 7/LW.7**

| | | |
|---|---|---|
| Police Station | : | Neyveli Thermal PS |

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | Selvam |
| Father Name/Husband Name | : | Patturangam |
| Village | : | Boothangudi |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 12.12.2022 என்னால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது காவல் உதவி ஆய்வாளராக பணியாற்றி ஓய்வு பெற்றுவிட்டேன். கடந்த 11.11.2012 ஆம் தேதி நான் தெர்மல் காவல் நிலையத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக பணியில் இருந்தபோது தொப்பிகுப்பத்தை சேர்ந்த மணிகண்டன் என்பவர் நிலையம் ஆஜராகி எழுத்துமூலமாக கொடுத்த புகாரை பெற்று தெர்மல் காவல் நிலைய குற்ற எண்.262/2012. இ.த.ச 341, 294(பி), 323 ன் பிரிவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன்.**( முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.)**

2) பின்னர் இவ்வழக்கின் சம்பவயிடம் சென்று சாட்சிகள் கல்யாணசுந்தரம், செல்வம் ஆகியோர் முன்னிலையில் 11.11.2012ஆம் தேதி 16.00 மணிக்கு சம்பயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார். **( பார்வை மகசர் அ.சா.ஆ.5 ஆகும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆகும்).** பின்னர் இவ்வழக்கின் சாட்சிகள் கல்யாணசுந்தரம், செல்வம், மணி, மணிகண்டன் ஆகியோர்களை தனி தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். பின்னர் தன்னுடைய விசாரணையில் சம்பவம் உண்மை என தெரியவந்ததால் எதிரிகளை தேடிவந்த நிலையில் 15.11.2012 ஆம் தேதி 11.30 மணிக்கு நிலையம் ஆஜராகி எதிரிகள் சிவராமன், குணசீலன், ஜெயராஜ், ஐயப்பன் ஆகியோர்களை கைது செய்து பிணையில் விடுவித்தேன். பின்னர் இவ்வழக்கின் முதற்கட்ட புலன் விசாரணையை முடித்து மேற்விசாரணைக்காக காவல் உதவி ஆய்வாளர் சிவராமன் என்பவர் மேற்பார்வைக்கு வைத்தேன்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

இந்த வழக்கின் சம்பந்தமாக பண்ருட்டி அரசு மருத்துவமனையில் இருந்து தகவல் வரவில்லை. பொதுவாக அடிதடி வழக்கில் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டால் அங்கிருந்து தகவல் காவல் நிலையத்திற்கு வரும் என்றால் சரிதான். இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1க்கு

யார் மருத்துவம் பார்த்தார்கள் என்றும் எந்த வார்டில் பார்க்கப்பட்டது என்றும் நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். எந்த பல் மருத்துவரை மணிகண்டன் பார்த்தார் என்ற விபரத்தையும் நான் தெரிந்துகொள்ளவில்லை என்றால் சரிதான். பல் மருத்துவா் கொடுத்த அறிக்கை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் உதவி ஆய்வாளர் மேற்விசாரணை செய்தார். சம்பவயிடத்திற்கு நான் சென்றேன். சம்பவம் எந்த இடத்தில் நடந்தது என்று புகாரில் கூறவில்லை என்றால் சரிதான். எதிரிகள் அ.சா.1ஐ எந்த இடத்தில் வழி மறித்தார்கள் என்று புகாரில் குறிபிட்டு சொல்லியுள்ளார்களா என்றால் சொல்லவில்லை. புகாரில் கூறாமல் சம்பவயிடத்திற்கு நான் செல்லாமல் காவல் நிலையத்தில் ஆவணங்கள் தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மகசர் சாட்சி கல்யாணசுந்தரம் 1வது எதிரியின் சகோதரர் என்றால் சரிதான். எதிரிகளை காவல் நிலைய பிணையில் விடுவித்தோம் என்றால் சரிதான். 4வது எதிரி ஐயப்பனுக்கு இந்த வழக்கின் மகசர் பட்டியல் சாட்சிகள் கல்யாணசுந்தரம், செல்வம் ஆகியோர் ஜாமீன்தாரராக இருந்தார்கள் என்றால் சரிதான். ஜாமீன் கொடுக்க வந்தவர்களை மகசர் சாட்சியாக தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. நான் சம்பவயிடத்திற்கு செல்லாமல் காவல் நிலையத்தில் ஆவணங்கள் தயார் செய்து வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகாரில் எதிரிகள் எந்த இடங்களில் அடித்தார்கள் என்று குறிபிட்டு கூறப்பட்டுள்ளதா என்றால் இல்லை. எதிரிகளுக்கும் புகார்தாரருக்கும் முன் விரோதம் இருந்தது என்றால் சரிதான். 1வது எதிரியின் அண்ணன் மகளை புகார்தாரர் கல்யாணம் செய்துகொண்டதால் எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்து இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் தயாரித்தும், எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை : இல்லை</u>**

# Deposition of Witness

(Chapter XXXIII Code of Criminal Procedure )

**In the Court of District Munisif Cum Judicial Magistrate, Neyveli.**

**CC.No. 114 /2014**
**PW.3 /LW.4**

Police Station : Neyveli Thermal PS

**Deposition of witness for Prosecution**

| | | |
|---|---|---|
| Name | : | Periyasamy (30) |
| Father Name/Husband Name | : | Velu |
| Village | : | Neyveli |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |

உறுதிமொழிச்சட்டம் 1969 பிரிவு-3ன் படி 08.12.2022 என்னால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

**முதல் விசாரணை**

நான் நெய்வேலியில் வசித்து வருகிறேன். நான் எலக்டிரிசியன் வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியாது. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>சாட்சி அரசு தரப்பில் பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டது.</u>**

கடந்த 06.06.2014 ஆம் தேதி காலை 9.00 மணியளவில் வட்டம் 28ல் உள்ள என் எல்சிக்கு சொந்தமான தேக்க மரதோப்பில் ஆஜர் எதிரிகள் மூவரும் அய்யாசாமி, ரகுநாதன. ஆகியோர்களை தேவிடியா பயளே குடிச்சகாரி பயளே என்று ஆபாசமாக பேசியதாகவும் பீர் பாட்டிலை உடைத்து குத்த வந்ததாகவும் சம்பவத்தை நேரில் பார்த்ததாகவும் போலிசார் விசாரணையில் சொல்லிவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்றவேண்டி உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கின்றேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை : இல்லை</u>**